(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

உறுப்பினர்களுடைய கூட்டம் ஒன்றை நம்முடைய மாநகராட்சி மன்றம் கூட்டி அவர்களுடைய ஆலோசனைகளையும் பெற்றிருக்கிறது. தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள 150 வட்டங்களையும் நாம் ஏற்றுக் கொள்வோமேயானால் ஒவ்வொரு வட்டத்திலும் ஏதோ பாதி சட்ட மன்ற உறுப்பினர் தொகுதியிலே வருகிற அளவுக்கு வாக்காளர்களுடைய எண்ணிக்கை வருகிறது என்ற காரணத்தால் ஏறக்குறைய 12,000. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்**பி**னர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு ஒரு சிறிய இடைவேளை. அடுத்து நீங்கள் தொடர்ந்து பேசலாம். இப்போது மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

6. அரசினர் தீர்மானம்.

பேரவை விதிகள் 36 மற்றும் 37-ஐத் தளர்த்தி விதி 95-இன் கீழ் ஒரு தீர்மானத்தை அவையில் எடுத்துக் கொள்ளுதல்.

***மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதிகள் 36, மற்றும் 37 ஆகியவற்றைத் தளர்த்தி மேற்படி விதிகளில் விதி 95-ன் கீழ் ஓர் அரசினர் தீர்மானம் கொண்டு வர அனுமதி அளிக்க வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி அளிக்கப் பெற்றது.

7. அரசினர் தனித் தீர்மானம்.

காவிரி நீர்ப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க மத்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அவசரமாக இந்தத் தீர்மானத்தை முன்மொழிய வேண்டிய அவசியம் வந்ததற்கான காரணத்தை நான் விளக்க வேண்டியவனாக இருக்கிறேன்.